# உணர்வுரை

**(சென்ற இதழின் தொடர்ச்சி)**

சொல்லாய்வு அறிஞர்
பேராசிரியர் ப. அருளியார்

## தமிழ்க்களத்துள் தோய்ந்திருக்கும் - எம் தலைவரின் நினைவலை!...

பாவேந்தர் எனும் புரட்சியெழுத்தாளரின் தாக்கமும் பெரியார் எனும் குமுக நலப் புரட்சியாளரின் கருத்துப் பரவலும் பள்ளிப் பயில்வுக் காலத்தேயே இவரைப் பற்றி யிருக்கின்றது! அவ்விருவரின் கருந்துத் தீயின் தூண்டல் வழி நம்பா மதத்தவராயும், இவரின் இயக்க நடைமுறை தொடக்கமாகியிருக்கின்றது! குமுகப் பொருளியல்சார் வரலாற்றுப் பயில்வும் உடன் சேர்ந்துள்ளது. கருஞ்சட்டையும் செஞ்சட்டையும் அக்கால் மாறி மாறி அணிந்து கொள்கை நிறப்போக்கைச் சூழ்ந்திருந்த குமுகத்திற்கு வெளிப்படுத்தியிருக்கின்றார்! பாவியம் படைக்கும் அளவுக்கு அவரின் கழி யிளந்தைப் பொழுது தொடங்கி இருக்கின்றது! தமிழ் மறவர் புலவர் பொன்னம்பலம் ஐயா இவர்க்கு ஆசிரியராயிருந்துள்ளமையும் இவ்வகைத் தூண்டற்பேற்றுக்குக் காரணக் கருவாகி இருக்கக்கூடும்! (பாவேந்தரொடு பொன்னம்பலம் ஐயாவுக்குச் செறிவான தொடர்பிருந்த காலம், அது! மறைமலை யடிகளின் தளித்தமிழ்க் கொள்கைக்குப் பாவேந்தரைக் கொண்டுவந்த புலவர் பெருமாள் அவர். ஆரிய எதிர்ப்பு வினை காரணமாக ஒன்றரையாண்டுக் காலம் ஆசிரியர் பணியில் இடைநீக்கம் பெற்ற தமிழ்ப் போராளி, அவர்!) இப் பொன்னம்பலச் சூழலில் நம் பாவலரேறாகிய ஐயா இத் தகைமையூட்டப் பேற்றுக்குள் உள்ளாகி அடிக்கால் ஊண்றி யிருக்கலாகும் என்றவாறு நம் எண்ணத்துள் ஒரு கரு கீற்றோடுகின்றது!

13-14-ஆம் அகவையிலேயே, அதுவாவது ஆறு அல்லது ஏழாம் வகுப்பிற் பள்ளியிற் பயின்ற அக்கழியிளஞ் சிற்றாம் பருவத்திலேயே பாவியம் ஒன்றை உருவாக்கிய வியப்பு வரலாற்று நிகழ்வினை

அவரின் குறிப்பு வெளிப்பாட்டின் வழியேயே நாம் தெரிவுறுகின்றோம்! (காண்க : கொய்யாக்கனி இரண்டாம் பதிப்பு முன்னுரையின் முகப்புப் பகுதி) முதன்முதலாக இவர் யாத்த பாவியத்தின் பெயர் "மல்லிகை" என்பதாகும்! (ஆண்டு: 1945. அப்பொழுது இவரின் அகவை பதின்மூன்றுடு!) அப் பெயரீட்டினுள்ளும் இவரின் இயற்கை வீடுபாட்டுத் தோய்வு விருப்பின் மணக்கீற்று பதிவாகியுள்ளமையைக் காணலாகும்! மல்லிகை எனும் பாவிய ஆக்கத்திற்கும் முள்ளீடாகக் "குழந்தை" என்ற பெயரில் தொகுத்து நடத்திய கையெழுத்து இதழும் "மலர்க்காடு" எனும் சிறப்புப் பெயரீட்டிலேயே வந்தது 900 வரலாற்றுச் செய்தி!

("மய் எனும் ஒரு தமிழ் வேர்ச்சொல், கருமைக் கருத்து குறித்துத் தொல்மாந்தன் மூளையுள் தோன்றியெழுத்து. ஒரு பொருண்மைச் சொல்லாகவே தகைமைப் பேறு பெற்றது இக் கருப்பு நிறங்குறித்த (மய் > "மை" மனத்துள் கருத்துறும் இருண்மைப் பொருட்பாட்டுக்கும் அதனின்று இருட்டினாற் போன்ற மயக்க வுணர்ச்சிப் பொருண்மைக்கும் பொருள் விரிவாக்கம் பெற்றது/ (Semantic Ex-tension), "மய்" என்பதினின்றே (மய் + அக்கு > மயக்கு +அம் மயக்கம் என்றவாறு சொல் வளர்ச்சியுற்றுப் பயன்பாடு கொண்டுள்ளது!

மயக்கமாகிக் கிறக்கந் தரும் மணத்தை, மலர்கையில் உருவாக்கும் மலர், (மய் மய்ல் >மல்>மல் + ல் + இ மல்லி + ஐ > மல்லியை > மல்லிகை எனும் பேறும் (- பேரும்) பெற்றது! முகு > முக. முக + (ப்) + பு > முகப்பு > மோப்பு. மோப்பு +அம் மோப்பம். முகந்த > மோந்த... மோப்ப ஈர்ப்பால் மணப் பொருட்பேறு பெற்றுள்ளது. இம் மல்லிகை! கடலினின்று -வெப்பாற்றல் அந்நீரினையே ஆவியாக்கி, முசுப்புறுவது என்னும், (நுண்ணறிவு சான்ற மூளைக்குத் தெரிவுற்ற) தெளிவுப் பொருண்மை யிலேயே முகு முகு + இல் "முகில்" என்றவாறு தோற்றப்பெற்றுள்ளமையும் ஈண்டுக் கருதத்தக்கது.

(தலைமையமைச்சராக இந்திய ஆளுமையிலிருந்த இந்திரா காந்தியின் அடக்குமுறைச் சட்ட நடவடிக்கையில் (மிசா) தளைப்படுத்தப்பெற்று (தமிழக விடுதலைக் கொள்கை நோக்குடையவர்

எனும் அடிப்படையில் சிறையுள் அடைக்கப் பெற்றிருந்த-) நம் ஐயா அவர்கள் ஓராண்டு சென்றே வெளியே வந்தார். அவ்விடைக் காலத்தே - ஐயாவின் குழமகனாகிய நம் மறவன் பொழிலனார் அவர்கள் அதே மல்லிகை எனும் பெயரிவாகவே தானே எழுத்தெடுத்து அச்சுக் கோத்து தானே அச்சுப் பொறியிலேற்றி உருவாக்கிப் பெயர்த்தளித்த விளையாண்மையும் அக்கால் நானும் ஓரோரத்தில் நின்று பங்கு கொண்டமையும் ஈண்டு நினைவில் நிழலாடு கின்றது! ஐயா அவர்களின் மல்லிகை யாக்கத்துக்கும் பொழிலனாரின் மல்லிகைக்கும் இடையில் இடைவெளி 31 ஆண்டுகள்!)

மலர்க்காடு, மல்லிகையை அடுத்து ஐயா அவர்களின் பாவிய உருவாக்கம், பூக்காரி எனும் பெயரியது ஆகும்! அப் பூக்காரி என்பதுவே, பின்னாளில் "கொய்யாக் கனி" எனப் பெயர் வேய்ந்தது!

பாவேந்தர் மீது அளவிறந்த பற்றார்த் திருந்தவர், நம் பாவலரேறு! (தம் வாணானில் பாவரங்கேறிப் பங்கு பற்றிய பதினான்கு நிகழ்வுகளுள் பாவேந்தரைப் பற்றி மட்டுமே, ஆறு அரங்குகளில் முழங்கியவர். ஐயா அவர்கள்! பாவேந்தரின் பீடு நிரம்பிய பெருவாழ்வின் பெருமைகளையும் கொள்கைகளையும் அவர்மீது தாம் கொண்டிருந்த பற்றார்வ மதிப்பையும் சுவையார அவ்வரங்குகளில் பதித்துள்ளார், நம் ஐயா!)

தம் 15-ஆம் அகவையில் தாமே இயற்றித் தொகுத்திருந்த கனிச்சாறு எனும் பெயரிலாகிய பா நூலினை (கையெழுத்துத் தொகுதி) பாவேந்தர்க்கெனவே படையலிட்டிருப்பத னுள்ளாக அவர்மீது ஐயா அவர்கள் கொண்டிருந்த மீமேம்பட்ட மதிப்பினைக் காணவியல்கின்றது!

அப்படையலுள்: "எந்நாளும் காக்கும் தமிழாளும் காவலன் சீரதிகம் சேர் புலமைப் பாரதிதாசன்" என்றவாறெலாம் பாவேந்தரைப் பற்றிச் சுட்டியிருப்பதனுள்ளாக பாவல ரேற்றின் அன்பு மீதூர்வு ஆர்வையே நாம் உணருகின்றோம்!

யானைகள் நிறைந்த ஓசூர் அன்செட்டியைச் சார்ந்த காட்டுத்துறையில் எழுத்தராகப் பணி செய்த பிறகு புதுச்சேரியில்

அஞ்சல் எழுத்தராகப் பணியாற்றுதற்கு வாய்ப்பு வந்தது! பாவேந்தரோடு பழகுதற்கென்றே வந்துள்ள வாய்ப்பிது என்றவாறான அவா மனநிலையார்வொடு புதுவைக்குப் புறப்பட்டு வந்தார். நடுவணரசுப் பணியுள் சேர்ந்தார். பாவேந்தரின் உள்ளத்து அன்பையும் நம்பிக்கையையும் சிறக்கப்பெற்று அன்றாடம் அவரொடு வாய்ப்பெய்தினார்! இயைந்து பழகும்.

"அன்றாடம் அலுவல் முடிந்ததும் பாவேந்தர் வீட்டில்நாள் என்னைப் பார்க்கலாம்!" என்றவாறு இந்நிலையைப் பற்றிக் 'கொய்யாக் கனி'க்கான இரண்டாம் பதிப்பின் வரலாற்று முன்னுரையுள் பதிவு செய்கிறார். தம் ஐயா! (12.8.1982)

ஈராண்டுக் காலமாகத் தான் கொண்டிருக்கும் தமிழ்ப்பற்று பற்றிய உரை யாட்டாலும் குறிப்புரைகளாலும் முறையாலும் பாத்திறத் தோய்வு பற்றிய நேர்மையார்ந்த பழகு அடக்கவொடுக்கப் பண்பு நடத்தையாலும் ஒன்றியக் கொள்கைச் சார்பாலும் தம்மைக் குளிர்வித்த 23 அகவையும் முற்றாத ஓரிளைஞரை - 65 அகவை வாய்த்த பெரியவராயிருந்த பாவேந்தர் உச்சத்தில் தூக்கி வைத்துப் போற்றி வாழ்த்திய வரலாற்றுப் பதிவாகிப் போன எட்டேயெட்டு ஒளிவரிகள் வியப்புக்குரியன!

அன்றைய புதுச்சேரி அரசியலில் நன்கு அறியப்பட்டவர்; சட்டமன்ற உறுப்பினர்; ஆட்சியவையின் அவைத்தலைவராய் இருந்தவர்! தமிழகத்தைத் தாண்டி. பன்னாடுகளிலும் நன்கு அறியப்பட்டவர்! அன்றைய அறிஞர் உலகில் மீமதிப்பு பெற்றவர்! புகழ் பூத்த உச்சாணிக் கொம்பில் கொடிகட்டிப் பறந்த பெருமிதக் காலம், அன்றைக்கு அவர்க்கமைந்திருந்த ஏற்றக் காலம்!

தம்மினும் 42 ஆண்டு அகவைக் குறை வுடைய 23 அகவையும் முற்றாத இளையர் ஒருவரை, அவரே தூக்கி வைத்து உச்சி மோந்து உயிர்ப்பார மகிழ்ந்தளித்துள்ள ஊக்கப்பா ஒலியல்(tonic) பாவேந்தர்க்கமைந்திருந்த பெரும்பண்பு ஒளிப் பகுதியை உலகுக்கு உரைக்கும் உரைகல்லாகும்! ஆம் அது ஒருவகையிலாகும் கட்டளைக்

கல்! அவரின் குழந்தை நெஞ்சம் எப்படிப்பட்ட குளிர்மையும் தளிர்மையும் நறுமையும், பெருமையும் வாய்த்திருந்தது, என்பதற்கோர் எடுத்துக்காட்டு! அது தான் "கொய்யாக்கனி" நூலுக்கென அவர் தந்த தங்கப் பா மாலை!

பாவலரேறு ஐயா அவர்களே, அதுபற்றிக் குறிப்பிட்ட நெஞ்ச நெகிழ்வுரையுள் இவ்வாறு உருகியுரைக்கின்றார்!...

"என்னை அவர் விளங்கிக் கொண்ட தன்மை - அவ் வரிகளுள் ஆழப் பதிந்திருந்தது. வெறும் சொற்களாக அவற்றைப் பாவேந்தர் பயன்படுத்தி விடவில்லை! அதில் அவர் பயன்படுத்திய ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு வரலாறு உண்டு!; உணர்வுண்டு! அதிலுள்ள அத்தனைச் சொற்களிலும் அவரின் தூய தமிழுள்ளம் கனிவு நிரம்பிய குழந்தை உள்ளம் பொறாமையற்ற சான்றாண்மையின் பெருந்தகையுள்ளம் பதிந்து மெய்ம்மை சாற்றி நின்றது! அதில் அவரின் சிரிப்பு துள்ளியது! நகைச்சுவை பொதுளி நின்றது! உவகை ஊஞ்சலாடியது! அன்பு குமிழியிட்டது! அறிவு சுடர்வீசியது! என்பால் அவர் வைத்த நம்பிக்கையின் ஈரம் கசிந்து நின்றது! அதில் என் உள்ளத்தையும் அதில் கொப்புளிக்கும் உண்மை உணர்வையும் அதன் சூட்டையும் குளிர்ச்சியையும் வெளிப்படுத்தியிருந்தார்! என் அறிவின் வலிந்த கொள்கையைச் சுட்டியிருந்தார்! அவரொடு நான் பழகிய பண்பு வழுவாத தொடர்பை உறுதிப்படுத்தியிருந்தார்! எல்லாவற்றுக்கும் எதிர்காலத்தையே மேலாக வாழ்த்தி நிலைப்படுத்தியிருந்தார்! மொத்தத்தில் அவர் அம் மதிப்புரையில் பயன்படுத்திய சொற்களில் அவரின் பாடல் உள்ளம் கொழுமை கொண்டது! வண்ண மாலைகள் சுடர்க் சுற்றைகளை வீசி, ஒரு பாவலனின் உள்ளத்தை வேறு ஒரு பாவலன் அறியும் படைப்புக் கமுக்கத்தை உலகுக்குப் புலப்படுத்தி யிருந்தார்! இவ்வனைத்துச் சிறப்புகளையும் உள்ளடக்கிய அவ் வயிரவரிகள் என் உள்ளத்தில் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சி, உணர்வு மூட்டத்துள் மூழ்குளித்தன! இன்று நினைத்தாலும், அன்றைய மாலைப்பொழுதின் தென்றல் வீச்சு என் உயிரைக் குளிர்விக்கிறது!"

(நாள் : 12.8.1982 கொய்யாக்கனி -இரண்டாம் பதிப்பின் முன்னுரை)

தமிழியப் பெருஞ்சொத்தான பாவலரேறுவுக்கு நிறைந்திருந்த ஆற்றல் ஊற்றங்கொண்ட புலத்தறிவு பாவேந்தர், தமிழ் மறவர் பொன்னம்பலனார், மொழிஞாயிறு ஞா. தேவநேயர் எனும் பெரும் புலவர் பெரு மக்களின் ஊட்டத்தால் செறிவுற்றதாகும்! பெரியார் எனும் குமுகத் தந்தையால் தெண்ணோக்கும் புத்தெழுச்சியும் நிறைந்தன!

பாவேந்தர் ஒரு புரட்சி எழுத்தாண்மையர்: பாவலரேறோ ஒப்பற்ற செயலாண்மையர் போராளி! ஓய்வு ஒழிச்சலற்ற தொடருழைப் பாளி! அஞ்சாநெஞ்சர்! அறிவுப்பெருமலை! தீதறியா கள்ளங்கவடறியா அருந்தமிழ் உள்ளத்தவர்!

இத் தகைமைகள் தமக்கிருப்பதை அவரே வெளிப்படுத்துவார்! (காண்க : "தென்மொழிக்கே மூச்சுயிர்த்து விடுதலைக்கே வாழும் தீதறியா என்னுள்ளத்தைக் கேள்வியொன்று கேட்டேன்!")

(தென்மொழி : 1969 வித்தும் விளைவும்)

அவரின் அன்பு வெளிப்படுத்த முறை தனித்தது; எழிற் கவினார்ந்தது; நுண்ணிய இன்பப் பாய்ச்சலைப் பெற்றோர்க்கு இறைத்து நிறைப்பது! கள்ளங் கரவிலாத கட்புலப் பேரொளி மின்ன அவர் கூர்க்கும் நுண்ணோக்கு செந்தகைமைப்பட்டது!

கொள்கைக்கு எதிர்நிலையென உணர்கையில், கொதித்துக் கனன்று எரிந்து தீய்ப்பதைப் போன்ற வெஞ்சினப் பார்வையும் அன்பிற் குழைவுறும் போது சில்லிட்டுக் குளிர்ந்து சுவ்வியீர்க்கும் கனிவுப் பார்வையும் வினையாற்றும்போது கட்டுற இயலும் ஆண்மைசார் ஆளுமைப் பார்வையும் எனப் பல்வகையினவாகச் சூழலமைவுகட்சொத்து ஒளிபிறக்குந் தகையன!

ஈழத்தமிழ் மக்கட்கெதிராக இந்நாட்டு நடுவண் அதிகாரக் கொடுங்கைகள் தமிழகத் தையே குறையாட்டுக் களமாக ஆக்கி வெறி கொண்டு அலைத்து அல்லற்படுத்தி அலம்பலாடிய இக்கட்டுக் காலத்தே நம் ஒட்டுமொத்தத் தமிழகமும் அடங்கியொடுங்கி,

அமுங்கியமுங்கி முகக்கூடு கவிழ்த்து முடங்கித் திணறிக் குமுறி உள்நடுங்கி விதிர்விதிர்த்துக் கிடந்த காலையில்,

"இதோ, நான் ஒருவன் இங்கிருக் கின்றேன்!
எனைச் சிறை செய்யினும் செய்க!
ஈழத் தமிழரை ஆதரிக்கின்றேன்!
என் தலை கொய்யினும் கொய்சு!..."
என்றவாறு நம் ஐயா அவர்கள் வெளிப்பட முழங்கிய வீறு, தமிழக வரலாற்றிலேயே ஓர் உச்சவொளி வீச்சு!... உள்ளக் கட்டுகளை யெல்லாம் நெகிழத் தளர்த்தி உயிர்ப்பித்த பாப் பாய்ச்சு!...

"எதுவரை எம்மூச்சு இயங்கு கின்றதோ
எதுவரை எம்முடல் இம்மண் தோயுமோ
எதுவரை எம்மனம் நினைவலை எழுப்புமோ
அதுவரை மொழியின ஆர்ப்பு அடங்காது..."
என முழங்கி சொன்ன சொற்கேற்பவே நீடி இயங்கி குறுகிய காலவெல்லையுள் அளப்புக்கரியவாறு பாரிப்பெருகிய அனற்குன்ற மொன்றைக் கொழுத்து விட்டெரியுமாறு கொளுத்திப் போட்டுவிட்டு அவர் அமைதீ யானாரி.... தம் கொள்கை நிறைவேறும்வரை இந் தமிழினம் அமைதியாயிருக்க வியலாதபடி

மிக நுண்ணுட்பமாகத் தாம் உட்கொண்டிருந்த எண்ணக் குவியலை இம் மண்மிசை கொட்டி விட்டுத் தமிழ்க்களத்தே அடைவு கொண்டார். தமக்குத் துணையாகவும், இணையாகவும் தொடர்ந்தியங்கி நிலைநெறிநின்ற தாமரையம்மை யெனும் தமிழ்த் தெய்வத்தையும் உடன் அணைவு கொண்டார்

நந்நலம் நோக்கிய அவரின் ஒள்ளிய கொள்கை அடைவு ஆக்கங்களை முற்ற முழுவதுமாக எதுவுமே எஞ்சாதபடியான எழுத்தடைவுகளாக, தம் 'அமைதி அனல்" செந்தமிழ் அண்ணல் சீரந்த வீறாரும் மா. பொழிலனார் அவர்களின் எண்ணத்தால் இயக்கத்தால் பேருழைப்பால் விடா முயற்சியால் - தெளிவால் தீர்வால் பேருருக் கொண்டு நம்முடைய வினைக்கடன் நோக்கி முன்வைக்கப் பெற்றுள!

நம் ஐயா அவர்களின் ஆண்மை, பொழில் வழியே பொழிவுற்றுள்ளது! பயன்படுத்திக்கொண்டு மீட்சியுறுவோம்! நாமும் பற்றவைப்போம்! செந்தீயைப் பரக்கப்

"அறிவெரி அரிமான்ஏறு!
அன்பிழை கன்னற் சாறு!
நெறியுறை தமிழ்த்தாய்ப் பேறு!
நேர்மையின் இலக்குக் காறு!
செறிந்தநற் பண்பார் காழம்!
சிதைவிலாக் கொள்கை வேழம்!
குறியெலாம் தமிழ்இந் நாடு
கூன்தமிழ் இனம் நிமிர்ப்பே!"

("தமிழ், சமற்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகளில் ஆராய்ச்சி நிறுவனத்தில் அருளி ஆற்றிய மொழியியல் உரைகள்" நூலின் முதல் தொகுதிப் படையல் 1982) (படைத்தே 43 ஆண்டுகள் ஆயினா)

பாவலரேறு IN GUJ & off cha பெருமையை நோக்கை கொள்கையை நெறிவாழ்வு அமைவைப் புரிந்து கொள்ளாது விளங்கிக் கொள்ளாது வீணே வெற்றே கொள்ளே காலங்கழித்தவாறு உள்ளோம்! உண்மையை உள்ளாது உள்ளோம்!

சுடர்விட வேண்டுமானால் சூடுபட வேண்டும்! (சுடச் சுடரும் பொள்!...}. வலிமையுற வேண்டின், வலி பொறுக்க வேண்டும்....இத் தமிழினம் அவரை அறியாது சுட்டது! அவரின் பெருமையுணராமல் கெட்டது! சுடுதல் இன்றி எப்படி ஒருவர் சுடர் விட முடியும்?!... சுடர் அவர்! அதுவும் அடல் சுடர்... அவரின் சுடரடர்வு ஒளிர்வின்வழி நம் வாழ்வுள் விடியல் துலங்கட்டும்! வீறு ஏறட்டும்! விடுபாடு கேரட்டும்! திண்பும் தெண்பும் சேரட்டும்!

(புதுச்சேரி : 24.7.2024)

இப் படிக்கு, அன்பின்பார், அருளி

# கன்னியும் - குமரியும்

**பேராசிரியர் ப. அருளியார்**

### கன்னி என்பவள் எவள்?!...

சமைந்தவள் - திரண்டவள் ("அந்தப் பெண் திரண்டவள்!" - என்பதெல்லாம் குமரிமாவட்ட வழக்குகள்) - அகவை வந்தவள் (வயசுக்கு வந்துட்டா!) என்பன போன்ற வழக்குகளில் நமக்கு விளங்கும் ஓர் உண்மை, - ஓர் இளம்பெண் தாய்மைப்பேற்றுக்கு உரிய உடல் திரட்சியினைப் பூப்பு எய்துவதால் சமைவாகின்றவள் என்பதாகும். (சமையல் என்பது பதனாக்கம் ஆகும்!)

இக் கருத்துக்களின் திரட்சியே, "கன்னி" எனும் செந்தமிழ் சொல்லும் கருவாகக் கிடக்கின்றது!

கன்னுதல் என்பது முதிர்தல்! அந்தப் பழம் கன்னிப் போய்விட்டது என்பதிலும் - அவருக்கு வந்த கட்டி கன்னிப்போய் உடையும் நிலையில் உள்ளது என்பதிலும் இம்முதிர்தல் பொருளைக் காணலாம்! (கட்டி பழுத்து விட்டது!..)

கன்னிய பழமே (அதாவது முதிர்வு எய்திய பழமே) (கன்னு > கன்னி) என வழங்கிக் காலவட்டத்தில் தொகுத்தல் திரிபாகக் (கன்னி > கனி) கனி என நின்றது!

கனிதல் = பழுத்தல். "கால மின்றியும் கனிந்தன கனி! என்பான் கம்பன்! (கம்பராமாயணம்: வனம்பு: 44) – கனிதல் = முதிர்தல் "கன்னிமை கனியா" (பரிபாடல்: 11:136)

திரண்டவள் – சமைந்தவள் – பதனெய்தியவள் – முதிர்ந்தவள் - அகவை வந்தவள் - பூப்பு எய்தியவள் என எவ்வகையிற் சுட்டினும் - ஒரு பெண் எனும் வளர்ச்சி நிலையில் அவள் புதுமையானவள்; புதியவள்! பிள்ளைப்பேற்றுக்கும் மணக்கோலம் புனைவுக்கும் உரிய அணிய நிலையினளாக எழுச்சி பெற்று நிற்கும் **புதுமகள்** இவள்!

இப் புதுமை அடிப்படைக் கருத்திலாக் “கன்னி” என்பதுவே, **புதுமை** - **முதன்மை** எனும் கருத்துக்களைத் தழுவிப் பற்றி விரிவாகியது!

கன்னிக்காய் = முதன்முதலாகக் காய்க்கும் காய்.

கன்னிக்கால் = புது வீட்டின் முதலில் தென்முகமாக

முதலில் நாட்டும் சீலை சுற்றிய தூண் (வின்சிலோ அகராதி)

கன்னிக்குட்டி = முதல் ஈற்று ஆட்டுக்குட்டி. (யாழ்ப்பாண வழக்கு) (முதல் கருவுற்றவளை யாழ்ப்பாணத்தில் “கன்னிப் பிள்ளைத்தாய்ச்சி” என்பர்!)

கன்னிப்பூப்பு = முதற்பூப்பு

கன்னிவேட்டை = முதன்முதலாகச் செல்லும் வேட்டை

“கன்னி வேட்டை மகன் போல” (பெரியபுராணம். கண்ணப்ப: 47) கன்னிப்போர் = வீரனது முதற்போர் “காருத்தன் கன்னிப் போரில்” (கம்பராமாயணம் தாடகை: 76)

கன்னி முட்டை = கோழி முதல் ஈடாக இடும் முட்டை (சாம்பசிவம் அகராதி)

கன்னி முயற்சி = ஒரு துறையில் ஒருவரின் முதல் முயற்சி “மலை மருவு நெடுங்கானில் கன்னி வேட்டை மகன் போல”

கன்னி விடியல் = வைகறை “கன்னி விடியல்” (ஐங்குறுநூறு: 68)

புதியதாக - முதன்முதலாக என்னும் பொருளிலேயே – இக் “கன்னி” எனும் சொல் அடையாகி முன்னிற்கின்றமையைப் பலபடி வழக்குகளில் நாம் காணுகின்றோம்! அதில் ஒன்றுதான் அண்மைக்கால அருங்கூட்டுச் சொல்வழக்கு ஆகிய “கன்னிப்பேச்சு” என்பதுவும்!

கன்னிப் பேச்சு = அவையில் முதன்முதலாக ஒருவர் பேசும் பேச்சு! இது, maiden speech எனும் ஆங்கில வழக்கினும் துலக்கம் சான்றது! வரலாறு வழிப்பட்டது!

## குமரி என்பவள் இவள்!...

கன்னிக்கு இணையான தமிழ் வழக்கு ஒன்று உண்டு!, என நம் அனைவருக்கும் தெரியும்! அவள் தான் குமரி!

“குய்” எனும் ஒரு வேர்ச்சொல் தமிழில் உண்டு! சேர்க்கை – திரட்சி - ஒன்றுகை என்றவாறாகக் கூடுகைக் கருத்தின் வேர், இது! இதிலிருந்தே குய் > குய் + உ > குயு > குழு – குய் > குய்ம் > கும் > கும் + (ம்) + உ > கும்மு > கும்மு+இ > கும்மி = கைகுவித்து அடித்து வட்டமிட்டவாறு மகளிர் கூடியாடும் ஆட்டம் – கும்மு > கும்மு+அல் > கும்மல் = கூட்டம். கும்மல் எனும் சொல்லினின்றே (com) (cum) (sym) – communal – communalisum – commune – commute – companion – company… cumulus … என்றவாறு பல சொற்கள் எழுந்தன!

கும் > கும் + பு > கும்பு. கும்பு + அல் > கும்பல் = கூட்டம். “கும்பு” என்பதனின்றே (கும்பு > குப்பு) “குப்பு” (குப்பு + ஆய் > குப்பாய், குப்பாயி) என்று பெண்பாலுக்கும் குப்பு + அன் > குப்பன் என்று ஆண்பாலுக்குமாகச் சொற்கள் எழுந்தன! (வெம்பு > வெப்பு. வெப்பு + அம் > வெப்பம் செம்பு > செப்பு)

கும் > கும் + அர் > குமர் > +இ > குமரி என்பது திரண்டவள் என்னும் பொருளது! மணப்பேற்றிற்கும் - பிள்ளைப்பேற்றிற்குமாக உடல் திரட்சி, - அகவைத் திரட்சி வாய்ந்த இளமகள், குமரி என அழைக்கப்பெற்றாள்.

திருநெல்வேலிப் பக்கங்களில் - அகவைக்கு வந்துவிட்ட பெண் ஒருத்தியின் வீட்டினைச் சுட்டும்போது, - அவர்கள் வீட்டில் “குமரு” வைத்துள்ளது என்பர்!

குமர் + இ குமரி = சமைந்தவள், பதனெய்தியவள், திரண்டவள்.

சமைதல் = பதனாதல், திரளுதல்

“சாமைக் கதிரும் - சக்கிலியப் பெண்ணும் சமைந்தால் தெரியும்!” என்பது ஒரு பழமொழி!

குமரியைக் குமாரி எனத் திரித்துக்கொண்டு – “மரி” (mori) என்னும் இறத்தற்பொருள் வேரினைச் சுட்டுவர் வடமொழிவாணர். குமரன் என்னும் செப்பச்சொல்லைக் “குமார” எனத் திரித்து வழங்குவர். இவையெலாம் கோளாற்றுப் பெயர்கள்; அன்மங்கலப் பெயரீடுகள்! (குமரனைக் குமார் எனவுந்திரிப்பர்!)

அறிஞர் மோனியர் மோனியர் வில்லியம்சு அவர்கள் தாம் தொகுத்த சமற்கிருத ஆங்கில அகராதியுள் இக் “குமார”... எனும் சொல்லுக்குப் பொருள் கூற வந்தவிடத்து, இவ்வாறு சுட்டுவார்!

Kumara: whether he is easily dying.

குமரன் - குமரி என்பன தூய செந்தமிழ்ச் சொற்கள்.

# அகத்தியர் புரட்டு: தமிழ், தமிழர்க்கு எதிரான சூழ்ச்சி! – 3

'காசி தமிழ்ச் சங்கமம் 3.0'-இன் கருப்பொருளாக அகத்தியரை இந்திய ஒன்றிய அரசின் கல்விஅமைச்சர் அறிவித்ததைத் தொடர்ந்து, செம்மொழி தமிழாராய்ச்சி நிறுவனம் சுறுசுறுப்புடன் செயல்படத் தொடங்கியது. சென்னையில் மாணவரைத் திரட்டி, அகத்தியர் புனைவு நடைச்செலவு, அகத்தியர் பற்றிய நூல் வழங்கல், படையலுணா வழங்கல், அகத்தியர் கட்டுரைப் போட்டி நடத்தல், ஆங்காங்கே அகத்தியக் கருத்தரங்கங்கள் நடத்தல் - என வேலைகள் நடந்தன. இவற்றுடன், காசி, அயோத்தி, பிரயாக்குராச்சிற்கும் பலரைக் கூட்டிச்சென்றனர். இவை எல்லாவற்றிற்கும் மக்கள் வரிப்பணத்தை வாரி இறைத்ததை முன்னரே பார்த்தோம்.

மேலும், செய்தித்தாள்களில் அகத்தியர் பற்றிக் கட்டுரைகள் எழுதப் பட்டன, மின் ஊடகங்களில் அகத்தியர் பற்றி நிறைய பேசப்பட்டன. குமுக ஊடகங்களில் எழுத்தாளர் மாலன் வகையாரின் அறிவியல் தொடர்பற்ற பழங்கதை (புராண) அடிப்படையிலான கருத்துகள் வரத் தொடங்கி, மிகக் கடுமையான எதிர்ப்பு எழுந்ததால் பேரளவு அடங்கின என்றும் பார்த்தோம்.

தொல்காப்பியத்திற்கு முன்பே தமிழுக்கு இலக்கணம் வகுத்தவர் அகத்தியர் என்றும் பாரதியார் இதை உறுதிப்படுத்தியுள்ளார் என்றும் எழுத்தாளர் மாலன் பேசியம் எழுதியும் வந்தார். அதற்குச் சான்றாக அவர் பாரதி எழுதிய தமிழ்த்தாய்ப் பாடலின்,

ஆதிசிவன் பெற்றுவிட்டான் – என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே – நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான். – என்னும் அடிகளை

எடுத்துக்காட்டினார். அவரும், அவர் வகையாரும், அவரைச் சார்ந்தோரும் அதே பாரதியின்,

'உயிர் பெற்ற தமிழர்' என்னும் தலைப்பிலான வேறொரு பாட்டில்,

கடலினைத் தாவும் குரங்கும் - வெங்
கனலிற் பிறந்ததோர் செவ்விதழ்ப் பெண்ணும்,
வடமலை தாழ்ந்தத னாலே - தெற்கில்
வந்து சமன்செயும் குட்டை முனியும்,
நதியி னுள்ளேமுழு கிப்போய் - அந்த
நாகர் உலகிலோர் பாம்பின் மகளை
விதியுற வேமணம் செய்த - திறல்
வீமனும் கற்பனை என்பது கண்டோம். – என்று பாடியுள்ளதை வசதியாக மறந்துவிடுகின்றனர்; மறைத்துவிடுகின்றனர்.

வடமலை தாழ்ந்ததனாலே தெற்கில் வந்து சமன் செயும் குட்டைமுனி அகத்தியனே கற்பனை என்று பாரதி பாடுவதை நாம் அவர்களுக்கு நினைவூட்ட வேண்டியுள்ளது. பல இடங்களில், பாரதி, இருவேறு நிலைகளில் இருவேறு வகையாகப் பாடியவர் என்பதை யாவரும் அறிவர்.

தொல்காப்பியர் ஐந்திரம் நிரம்பியவர் என்றும் ஐந்திரம் என்பது வடமொழி இலக்கணம் என்றும் பெருமையாக மாலன் முகநூலில் எழுதுகிறார். மொழிஞாயிறு பாவாணர், ஐந்திரம் என்னும் வடமொழி இலக்கணமும், 'பிராதிசாக்கியங்கள்' என்னுங் கிளை 'வேத' இலக்கணங்களும் தமிழிலக்கணத்தைப் பின்பற்றி எழுந்தவையே என்றும் ஐந்திரம் தமிழகத்திலேயே தோன்றித் தமிழகத்திலேயே அழிந்ததாகத் தெரிகிறதென்றும் 'செந்தமிழ்ச்செல்வி' 1979 பெப்பிரவரி கட்டுரையில் கூறுகிறார். இவை தவிர, மாலன்வகையார் திரும்பதிரும்பக் கூறும் உரையாசிரியர் கூற்றுகள், கம்பனின் பாடலடிகள் பற்றி முன்னரே விளக்கியுள்ளோம்.

புறநானூறு 201ஆம் பாடலில் வரும் ‘வடபால் முனிவன்’ என்ற பெயர் அகத்தியரைக் குறிப்பதென எழுத்தாளர் மாலனும் அவர் வகையாரும் கூறிக்கொள்கிறார்கள். சம்புமுனிவனை அகத்தியனாக்கும் இவர்கள் முயற்சி வீண் என்னும் வகையில் முன்பே அப் புறப்பாடலின் கருத்தை விளக்கிக் கூறியிருக்கின்றோம். (“வடபால் முனிவன் தடவினுள் தோன்றி” என்று கபிலர் கூறியிருப்பதற்கு, ‘விசுவபுராண சாரம்’ என்னும் தமிழ் நூலையும் ‘தெய்வீக உலா’ என்னும் நூலையும் அடிப்படையாக வைத்து, இங்கு முனிவன் என்று குறிபிடப்பட்டது சம்புமுனிவன் என்று உ.வே.சாமிநாத ஐயரே கருத்துரைக்கிறார். ‘தடவினுள் தோன்றி’ – என்றால் ‘வேள்வியில் தோன்றி’ என்று பொருள். இதுவும் கற்பனையான பழங்கதை யாகலின் ஆராய்ச்சிக் குரியதன்று எனப் பாவாணரும் பிறரும் கூறுவர்)

அகத்தியர் பற்றி ஓர் ஆங்கில நூல் உட்பட ஏறத்தாழ ஏழு நூல்கள் ஆய்வாளர்களால் எழுதப்பட்டுள்ளன. இவையுந்தவிர, அறிஞர்கள் தனிக் கட்டுரைகள் பல எழுதியும் அகத்தியர் பற்,றி விளக்கம் தந்துள்ளனர். இதுவரை வந்த அகத்தியர் பற்றிய ஆயவு நூல்களாவன:

1. K.N. Sivaraja Pillai, “Agastya in the Tamil Land’ University of Madras. 1930.

2. கா.நமச்சிவாய முதலியார், ‘அகத்தியர் ஆராய்ச்சி’, குடிஅரசுப் பதிப்பகம். 1931.

3. ந.சி.கந்தையா பிள்ளை, ‘அகத்தியர்’ ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம், 1931.

4. ஆ.சிவலிங்கனார், ‘அகத்தியர்கள்’, ஒற்றுமை அலுவலகம், 1948.

5. கவிராச பண்டிதர் செகவீரபாண்டியன், ‘அகத்திய முனிவர்’, மதுரை, 1940.

6. துடிசைகிழார் அ.சிதம்பரனார், ‘அகத்தியர் வரலாறு’ தி.தெ.சை.நூ.கழகம், 1950, 1964.

7. முனைவர் ப.தங்கராசு, ‘தமிழ் இலக்கியங்களில் அகத்தியர்’, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1997.

அறிஞர் கே.என்.சிவராசப் பிள்ளை (1879-1941) சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர். கட்டுரையாளர்; பாவலர்; இதழாளர். இவருடைய ‘சங்க இலக்கியங்கள்’, ‘அகத்தியர்’, ‘கம்பராமாயணம்’ பற்றிய ஆய்வுக்கட்டுரைகள் குறிப்பிடத் தக்கவையாகும். தமிழிலக்கியங்களின் காலக்கணிப்பிலும் ஈடுபட்டவர்.

இவர், “Agastya in the Tamil land” என்னும் தம்முடைய ஆங்கில நூலில், Early History of Decan (Bhandargar), History of Ancient Sanskrit Literature (Maxmuller), The Great Epic of India (Hopkins) ஆகிய மூன்று நூல்களின் அடிப்படையில் அகத்தியரை ஆராய்ந்தார் என்பர். அகத்தியர் என்னும் பழங்கதை(புராண)ப் பெயர் எப்படி வடஇந்தியப் பழங்கதைகளில் கையாளப்பட்டுள்ளது, தமிழில் அப்பெயர் எவ்வண்ணம் பதிவாகியுள்ளது என்று இந்நூலில் ஆராய்கிறார். அகத்தியர் பற்றிய ஆய்வு நூலாகவும், வரலாற்றுக்கு முந்தைய தமிழ்ப் பண்பாட்டை விளக்கும் ஆய்வாகவும் இந்நூல் கருதப்படுகிறது. இந் நூலின் தமிழ் மொழியாக்கம் இதுவரை வரவில்லை.

‘அகத்தியரை இராமாயண, இருக்கு மறை நூல்களின்படி பார்ப்பது வழக்கம். அகத்தியர் பற்றிய பழங்கதைகளும் தொன்மச் சான்றுகளும் கம்போதியா, இந்தோனேசியா தீவுகளிலும் உள்ளன. பெரும்பாலும் இவை கற்பனையின் அடிப்படையில் உருவானவை. காரிக்கண்ணனார், ஆலத்தூர் கிழார், தாமப்பல் கண்ணனார் போன்ற புலவர்களின் பாடல்களின் அடிப்படையில் அகத்தியரைப் பார்ப்பனர் என்று முடிவு செய்துள்ளனர். எனவே அகத்தியர் குறித்த பழங்கதையை மீளாய்வு செய்யவேண்டி யுள்ளது’ என்கிறார். தொல்காப்பியர் அகத்தியரைப் பற்றி எதுவும் சொல்ல வில்லை என்று உறுதியாகக் கூறுகிறார்.

தமிழ் நாட்டில் அகத்தியர் காலடி வைப்பதற்கு முன்பே, தொண்டை மண்டிலக் காட்டை (தண்டகாரணியத்தை) மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடமாக்க இரு நூற்றாண்டுகளும், கருநாடகப் பகுதியில் ஆரிய வல்லாண்மையை ஏற்படுத்த இரு நூற்றாண்டுகளும் ஆக நான்கு நூற்றாண்டுகள் கழிந்திருக்க இடமுண்டு என்றும் கூறுகிறார். மேலும் இவ்வாறு கணக்கில் கொண்டால் அகத்தியர் மெள்ளமெள்ள பொதிய மலையை வந்து அடைய நான்கு அல்லது ஐந்து நூற்றாண்டுகள் ஆகியிருக்குமென்றும் இதனால் ஒரே அகத்தியர் இத்தனை ஆண்டுகள் வாழ்ந்து இப்பணியைச் செய்திருக்க இயலாது என்றும் குறிப்பிடுகிறார்.

அகத்தியர் பெயரில் வந்த பலரே இங்ஙனம் ஆரிய வழியாக்கிய பணியைச் செய்திருக்க வேண்டும் என்று இவர் கருதுகிறார். மேலும் இருக்குமறைகால அகத்தியர், இராமாயணகால அகத்தியர் ஆகியோர் மட்டுமல்லாமல் மேலும் நான்கனுக்கு மேற்பட்ட அகத்தியர்கள் கருநாடகம், தமிழகம், இந்தோனேசியத் தீவுகள், கம்போதியா முதலிய கீழை நாடுகள் முதலிய பகுதிகளில் ஆரியமதம், ஆரியக்கோட்பாடுகள் ஆகிய வற்றைப் பரப்பியிருத்தல் வேண்டும் என்றும் இவர் சுட்டிக்காட்டுவார்.

அகத்தியர் தென் பகுதிக்கும் பிற நாடுகளுக்கும் போந்ததன் நோக்கம் ஆரிய மதம், ஆரியக் கோட்பாடுகள் முதலானவற்றைப் பரப்பவே என்றும், அவ்வாறு போந்த அகத்தியர் ஒருவரல்லர் என்பதும், அப்பெயரினைத் தாங்கியவர் பலரே என்பதும் இவருடைய கருத்தாகும்.

பல்வேறு காலங்களில் வாழ்ந்த பல்வேறு ஆசிரியர்களால் அகத்தியர் பெயரால் தொகுத்தளிக்கப் பெற்றவையே இன்று அகத்திய நூற்பாக்கள் எனக் காணப்படுகின்றன என்றும், இவை முழுமையும் போலி நூற்பாக்கள் என்றும் கூறுவார். மேலும் அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் ஆகியோர் மேற் கோளாகக்

காட்டியுள்ள அகத்திய நூற்பாக்கள் கூட அகத்தியர் செய்தன அல்ல என்றும், அவையும் பிற்கால நூற்பாக்களே என்றும் சுட்டுவார்.

இந்நூலில் குறிப்பிட்டுள்ள சில கருத்துகளை முன்பே எடுத்துக்காட்டி யிருந்தோம். இவர் கருத்துப்படி, அகத்திய மரபு என்பது, “பழங்கதையாளர் (புராணிகர்) படையணியின் கைகளில் கொடுக்கப்பட்ட வெற்றுக் குண்டறைத் துமுக்கிகள்" ("The array of puranic battalion... But its arms are loaded only with blank cartriges") ஆகும்.

அறிஞர் கா.நமச்சிவாய முதலியார் ‘அகத்தியர் ஆராய்ச்சி’ என்னும் தம் நூலில் அகத்தியர் பிறப்பைப் பற்றிப் பலவேறு பழங்கதைகளில் (புராணங்களில்) பல்வேறு வகையாக உருப்பசி(ஊர்வசி)யைத் தொடர்பு படுத்திக் கூறப்படும் அருவருப்பான காமக்கதைகளைக் குறிப்பிடுகின்றார். பல்வேறு பழங்கதைகளில் (புராணங்களில்) இடம்பெறும் அகத்தியர் பற்றிய வேறு பல செய்திகளையும் கூறுகின்றார். இந் நிலவுலகு தட்டையாக இருக்கிறதென்றும், அதன் நடுப்பாகத்தை ஒரு கோல் தாங்கிக்கொண்டிருக்கிறதென்றும், விந்தியமலை அடக்கப்பட்ட தென்றும் கூறுவது நம்பத்தக்கதாக இல்லையென்றும், வாதாபி வில்வலன் கதையும் அவ்வாறே என்றும் கூறுகிறார்.

முதற் கழகம் (சங்கம்), இடைக் கழகங்களில் அகத்தியர் இடம்பெற்றதாகக் கூறப்படுவதைப் பற்றிய இவரின் கருத்தை முன்னரே பார்த்தோம். ‘அகத்தியம்’ இயல் இசை நாடகத்தமிழ் இலக்கண நூல் என்பது நம்பவியலாததாக இருப்பதாகப் பல எடுத்துக்காட்டுகளுடன் கூறுகிறார். அகத்தியரின் மாணாக்கர் பன்னிருவர் என்ற செய்தியையும் ஐயத்தின் பாற்பட்டதாகக் குறிப்பிடுகின்றார்.

“நமக்கு இப்போது கிடைத்துள்ள தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு ஆகிய நூல்களில் ஓரிடத்தும் அகத்தியனாரைப் பற்றி ஒருசிறிதும் காணப்படவில்லை. இத்தகைய அரிய முனிவரைப்பற்றி –

தமிழ்மொழிக்கு முதற்கண் இலக்கணம் வகுத்த ஆசிரியரைப்பற்றி – தமிழ்நாட்டில் வந்து இரண்டு கழகங்கள் (சங்கங்கள்) நிறுவிய முனிவரைப்பற்றி - ஆயிரக்கணக்கான யாண்டுகள் வாழ்ந்த வாழ்கின்ற பெரியாரைப்பற்றி, மிகப்பழமையாக வழங்கும் சங்கநூல்கள் ஏதுங் குறித்துக் கூறாதது என்னே!" என்று வியந்து கூறுகின்றார்.

"அகத்தியர் மருத்துவம் எனத் தமிழ்நாட்டில் பலவகை நூல்கள் தோன்றியுள்ளன. இவையன்றி வாதம், சோதிடம் முதலியவற்றிற்கும் நூல்கள் குறிக்கப்படுகின்றன. அவற்றைப் பார்க்கும்பொழுதே அகத்தியர் செய்தனவல்லவென்று புலப்படும்" என்கின்றார்.

முடிவாகக் கூறும்போது, அகத்தியர் என்னும் பெயரால் பற்பலர் காணப்படுகின்றனர் என்றும் அகத்தியர் பரம்பரை எனப் பலர் இருந்தனரென்றும் பல எடுத்துக்காட்டுகளுடன் கூறுகின்றார். "முதற்கண் வந்த அகத்தியனார் அகத்தியம் என்ற நூலைச் செய்தனர் என்பது நம்பத்தக்கதன்று. அவர் முதலிரண்டு சங்கங்களை நிறுவினா ரென்பதும் பொருந்தாதாம்" எனப் பல காரணகளைக் காட்டி விளக்குகின்றார்.

அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை 'அகத்தியர்' என்னும் தம் நூலில் பெரும்பாலும் அகத்தியர் தொடர்பாக பிற அறிஞர் கூறுவதையே எடுத்துக் காட்டுகின்றார். அவர் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள சிலபகுதிகள்:

"சமக்கிருதத்தில் இரண்டு அல்லது மூன்று அகத்தியர் பெயர்கள் காணப்படுகின்றன. வான்மீகருக்கு முற்பட்டவரும் வேத காலத்தவருமாகிய அகத்தியர் ஒருவர் இருந்தார். இவர் கங்கைக் கரையில் வாழ்ந்த ஆரியக் கூட்டத்தினரின் தலைவரும் உலோபாமுத்திரையின் கணவருமாவார். வேறு இரண்டு அல்லது மூன்று அகத்தியர்களைப் பற்றி 'இதிகாசங்கள்' கூறுகின்றன".

“நாம் ஆகத்தியர் வரலாற்றைக் குறித்துப் பின் வருமாறு உய்த்துக் கூறலாம்: ஆரியர் வருகைக்கு முன் அகத்தியர் என்னும் பெயருடைய தமிழ் அறிஞர் ஒருவர் தமிழ்நாட்டில் விளங்கினார். இவர் சமக்கிருதத் தோடு தொடர்புபெற்ற அகத்தியரில் வேறானவர். இவர் தமிழர் மதிப்பு அளித்த அறிவர்களுள் ஒருவர். அகத்தியர் என்னும் தமிழ்ப் பெயரே 'அகத்திய' என்னும் ஆரியப் பெயரோடு ஒற்றுமை காணப்பட்டமை கொண்டு அவர் ஆரியராக்கப்பட்டார்’ என்றும் குறிப்பிடுவர்

“தொல்காப்பியர் அகத்தியரின் மாணவர் என்னும் பழங்கதை வழங்குகின்றது. தொல்காப்பியர் அகத்தியரைப்பற்றி எங்கும் குறிப்பிட வில்லை..தொல்காப்பியர் அகத்தியரைக் குறித்து யாண்டும் கூறாமையால் அவர் அகத்தியரின் மாணவரல்லர் என்பது எளிதில் விளங்கும். இவர் அகத்தியர் மாணவர் ஆயின், மிகப்புகழ் படைத்த தன் ஆசிரியரைக் கூறாது மறைக்கும் நன்றியில்லாத குணத்தை இச் சிறந்த ஆசிரியர் மீது ஏற்ற நேரும்.”.

தொல்காப்பியருக்குப் பிற்பட்ட மக்கள் ஆரிய சம்பந்தமான பல கற்பனைகளை அகத்தியரோடு சம்பந்தப்படுத்திக் கட்டிவைத்தார்கள். தமிழ்ப் பெயர்களை ஆரியர் தம்முடையவையாகத் தமது பழங்கதைகளில் எடுத்து வழங்குவது இயல்பு. தமிழ் முருகன் சுப்பிரமணியராகவும், தமிழ் மால் விஷ்ணுவாகவும் வழங்கப்படுகின்றமையை நாம் அறிவோம். தமிழ்க் கருத்துக்களை ஆரியமாக்கு மிடத்துத் தமிழ்க் கடவுளர் ஆரியராக மாறினர். தமிழ்நாட்டிலுள்ள இடங்கள், ஆறுகள், மக்களுக்கு ஆரியப்பெயர்கள் இடப்பட்டன. வெண்காடு சுவேதாரணியமாகவும், தண்பொருநை தாம்பிரபர்ணியாகவும் மாறின. ‘பண்டை’ என்னும் அடியாகத் தோன்றிய பாண்டிய பரம்பரைப் பெயர் பாண்டவ அல்லது பாண்டு வமிசமாக மாறிற்று. இவ்வாறே தமிழ் அகத்தியர் சமக்கிருத அகத்தியராக மாறியிருத்தல் வேண்டும்.

தமிழ்நாட்டில் வழங்கும் அகத்தியர் வரலாற்றுக்கு அடிப்படை பொதியமலையில் இருந்த ஒருவராதல் வேண்டும்;

இல்லையேல் அகத்தியரைப் பற்றிய பழங்கதைகள் அந்தரத்தில் எடுத்த கோட்டையாக மாறிவிடும்.

தமிழ்ப்புலவர்கள் ஆரியரொருவரைத் தமிழ்க் கல்விக்குத் தலைவராக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதினாலும் அகத்தியர் தமிழராவர் என்பது வலியுறுகின்றது. பழங்கதை(புராண) காலத்தில் அகத்தியரைப்பற்றி ஆரியப் போக்கான கற்பனைக் கதைகள் வளரத் தொடங்கின. அகத்தியர் என்னும் தமிழ்ப்பெயர் அகத்திய என்னும் ஆரியப் பெயரோடு ஒற்றுமை காணப்பட்டமை கொண்டு அவர் ஆரியராக்கப்பட்டனர்."...

"*செங்கோன் தரைச்செலவு*' என்னும் நூலில் முத்தூர் அகத்தியர் என்னும் தமிழ்ப்புலவர் ஒருவர் பெயர் காணப்படுகின்றது. அவரை ஒப்ப மதிப்பைப் பெற்றிருந்த ஒருவரே அகத்தியராவர். முத்தூர் கன்னியா குமரிக்குத் தெற்கேயிருந்து மறைந்துபோன பாண்டியநாட்டின் பகுதியில் உள்ளது. இதனால் ஆரியர் தென்னாடு வருவதன்முன் அகத்தியர் என்னும் தமிழர் ஒருவர் இருந்தாரென்பது 'செங்கோன் தரைச்செலவு' நூலால் தெரியவருகின்றது.

தமிழ்நாட்டில், அகத்தியர் என்னும் பெயருடன் பலர் விளங்கி யிருத்தல் கூடும். அவர்களுள் ஒருவரே மிகப்புகழ் படைத்தவர். இவருடைய பெயரைச் சுற்றி அவர் புகழை விளக்கும் பல கதைகள் வந்து திரண்டன. இவ்வாறே ஆரிய அகத்தியரைக் குறித்த கதைகளும் அவர் பெயரைச்சுற்றித் திரண்டன. சங்ககாலத்துக்குப் பின் ஆரியக் கதைகளும் தென்னாட்டு அகத்தியர் கதைகளோடு வந்து கலந்தன".

"கி.பி. முதல் ஆயிரம் ஆண்டுகளில் தோன்றிய இலக்கியங்கள் எவற்றிலாவது அகத்தியர் கடவுளிடமிருந்து தமிழைக் கற்றாரென்றாவது, அவர் தமிழைத் தோற்றுவித்தா ரென்றாவது கூறப்படவில்லை. அகத்தியர் தமிழுக்கு இலக்கணம் செய்தாரென்றும், அவர் சிவபெருமானிடத்தும் சுப்பிரமணியக்

கடவுளிடத்து மிருந்து தமிழைக் கற்றாரென்றும் வழங்கும் கதைகள் கி.பி.1000க்குப் பின் தோன்றினவாதல் வேண்டும்”.

“சில செய்திகளில் சிறந்த மாந்தர் பெயரைச் சிறந்த பொருள்களுக்கு இட்டு அழைப்பது மாந்தர் கொள்கை. அது மலை, ஆறு, ஊர் முதலிய வற்றிற்கும் பொருந்தும். அதுபோல் அகத்தியனார் சிறந்தவரா யருத்தலின் அவர் பெயரை விண்மீனுக்கு இட்டிருக்கலாம். அதனால் அவர் தமிழுக்கும் ஏதும் செய்தாரென்று நிச்சயிக்க முடியாது”

“சீத்தலைச்சாத்தனார் (‘மணிமேகலை’ ஆசிரியர்) காலத்தில் அகத்தியரைப் பற்றிய வரலாறு மிகப் பழங்கதையாக வழங்கிற்றே யன்றி அகத்தியர் தமிழோடு தொடர்பு பெறவில்லை. அக்காலத்தில் அகத்தியர் பொதியமலையில் இருந்தாரென்னும் வரலாறு வழங்கிற்று.

அகத்தியர் குடத்தில் பிறத்தல், பிரமதேவருக்கு ஊர்வசியிடம் பிறத்தல் போன்ற கதைகளை ஆராய்தல் மணல் சோற்றில் கல் ஆராய்தல் போலாகுமெனக் கருதி அவற்றை ஈண்டு ஆராய்ந்திலேம்.”

கவிராச பண்டிதர் செகவீரபாண்டியன் எழுதிய நூல் ‘அகத்திய முனிவர்’ என்பதாகும். இந் நூல், அகத்திய முனிவரின் பிறப்பு, இருப்பு, குணம், செயல், பெருமை என்னும் ஐந்து இயல்களைக் கொண்டுள்ளது. அகத்தியர் பிறப்பு பற்றிக் கூறும்போது, ‘நதி மூலத்தையும் முனி மூலத்தையும் முனைந்து காணலாகாதென மூதறிவாளர் புனைந்து கூறியுள்ளார்’ என்று கூறிவிடுகிறார்.

சிவன் சிவை திருமணத்தில் வடக்கு தாழ தெற்கு உய,ர்ந்ததாகக் கூறி சிவன் அகத்தியரைத் தெற்கே போகப் பணித்த கதை, அகத்தியர் பொதிகை மலைக்கு வந்து அகத்தியம் என்னும் இலக்கண நூலை எழுதியதாகக் கூறப்படும் கதை முதலிய

எல்லாவற்றையும் உண்மையாக நடந்ததாக எழுதுகிறார். அகத்தியர் ஒருவரே எனக் கருதுகின்றார். எல்லாப் பழங்கதைகளையும் தரவுகள் சான்றுகள் பற்றிக் கருதாது உண்மையென எழுதுகின்றார்.

முரல், இடை, கடை என முக் கழகங்களிலும் (சங்கங்களிலும்) அகத்தியர் இருந்ததாகக் கூறுகிறார். கூறப்படும் நிகழ்வுகளுக்கு இடையில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இருக்க, அகத்தியர் தம் ஆற்றலால் அவ்வளவு காலம் உயிர்வாழ்ந்ததாக எழுதுகிறார். எனவே எல்லாப் பழங்கதைகளையும் வெறும் நம்பிக்கை அடிப்படையில் நடந்ததாகக் கூறுவதால், ஏற்க இயலாதனவாக உள்ளன. மேலும், இந் நூல் அறிவுக்கும் அறிவியலுக்கும் தொடர்பற்ற செய்திகளைக் கூறுவதால், நம்பகத்தன்மை இல்லாததாக உள்ளது.

அறிஞர் ஆ.சிவலிங்கனார் ‘அகத்தியர்கள்’ என்ற தம் ஆய்வுநூலில், “அகத்தியர் ஒருவரல்லர். நால்வருக்கு மேற்பட்டிருந்திருத்தல் வேண்டும். அவருள் தமிழ் அகத்தியர் இருவர். ஆரிய அகத்தியர் இருவர்... பிற அகத்தியர்களும் இருந்திருக்கின்றார்கள் என்று எழுதியுள்ளார். இதை முன்னரே எடுத்துக்காட்டினோம். சிவலிங்கனார், பெரும்பாலும் பழங்கதை (புராணக்கதை)களை ஒட்டியே கருத்துரைக்கின்றார்.

‘இலிங்கம்' - இதனை 'லிங்கம்' என்று கூறி ஆரியச்சொல் என்பர். ஆரியர்களுக்கு இலிங்க வழிபாடே யில்லை யென்றும் அவர்கள் தமிழர்களுடன் கலந்த பின்னரே இலிங்க வழிபாட்டை மேற்கொண்டனர் என்றும் ஆராய்ச்சியின் முடிபாக அறிஞர் கூறுகின்றனர்... ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்த பின்னர் எழுதப்பட்ட இருக்கு வேதத்திலும் இலிங்க வழிபாட்டைப் பற்றிக் கூறப்படவில்லை. அதனால் இலிங்கம் என்பது தமிழ்ச்சொல்லே யென்பது தேற்றம்’. ‘இலிங்கம்' என்றசொல் எப்படி ஆரியச் சொல் எனப்பட்டதோ அதே போன்று அகத்தியர் என்ற சொல்லும் ஆரியச் சொல்லாக்கப்பட்டது. இது தூய தமிழ்ச்சொல். அகம் என்ற பகுதியின் அடியாகத் தோன்றியது. அகத்தியர் என்பது -. அர் விகுதி.

'அத்து' சாரியை. அகத்தர் என்பது பின் அகத்தியர் என்றாகி யிருக்கலாம்.

அகத்தியரைப் போல அக்காலத்தில் முத்தமிழையும் முறைப்பட ஓதி யுணர்ந்து தம்மகத்தில் நிறுத்தியவர் இன்மையின் அக்கால மக்கள் இவரைச் சிறப்பிப்பான் வேண்டி அகத்தியர் என்று அழைத்தனராதல் வேண்டும். அச்சிறப்புப் பெயரே நிலைப்ப தாயிற்று".

அகத்தியர் வட நாட்டிலிருந்து தம்மொடு வந்த பார்ப்பனர்களுக்காக இலக்கணத்தை (அகத்தியம்) யியற்றினார் எனக் கூறுவாரும் உளர். அவர் கூற்று அகத்திய நூலாசிரியரை வடநாட்டகத்தியர் எனக் கொண்டமையால் நேர்ந்த பிழையாகும்" என்று எழுதுகின்றார்.

'சிலர் தலைச்சங்கத்திலிருந்த அகத்தியரே இடைச்சங்கத்தும் இருந்தார் என்பர். அது பொருந்தாது'. தலைச்சங்கத் திருந்த அகத்தியரே இடைச்சங்கத்தும் இருந்தார் என்றால் அகத்தியர் 4410 ஆண்டுக்கட்குமேல் இருந்திருக்க வேண்டும் அன்றோ? இது எள்ளளவும் நம்புதற்கியலாதது' – என்கிறார்.

'வடநாட்டகத்தியர்களைப் பற்றிக் கட்டிய கதைகள் பல. நடந்தன சில. ஆரியர்கள் தம்மை யுயர்த்திக் கொள்ளச் செய்த சூழ்ச்சிகள் பல. அவற்றுள் தலை சிறந்தது வேதத்தைச் சூத்திரர் பயிலுதல் கூடாது என்றது. தமிழர்களை அவர்கள் சூத்திரர் என்றனர்...வேதம் இறைவன் உரைத்தது என்றனர். கடவுளிடத்து நம்பிக்கையும் ஆழ்ந்த பற்றுதலும் கொண்ட தமிழர் நம்பினர். அதனால் பலர் ஆரியமயமாயினர். தம்மைத் தாமே யிழிவுபடுத்திக்

கொண்டனர்... அதன் விளைவுகள்தாம் ஆரிய அகத்தியர்கள் தென்னாடு போந்ததும் ஆரியர் மிகுதியாகக் குடியேறியதும் ஆம்" - என்று குறிப்பிடுகின்றார்.

“இமயமலை யரசனிடம் சென்று சிவனார் பார்வதியை மணந்த காலைத் தேவரெல்லாம் கூடிச் சேர இருந்தமையின் தென்திசை உயர்ந்ததாக அதனைச் சமப்படுத்துவான் வேண்டிச் சிவனார், அகத்தியரை நோக்கித் தென்திசைசென்று பொதியிலில் இருக்க என, அவர் தென்னாடு போந்தார் – இதை யூன்றி நோக்கின் மறைவாக உள்ள ஓர் உண்மை புலப்படும். தென்திசை யுயர்ந்த தென்பது தென்னாடு பல வளங்களாலும் கல்வி கேள்விகளாலும் வீரம் முதலியவற்றாலும் சிறந்துயர்ந்த நிலையையே குறிக்கும். இதனைக் கேள்வியுற்ற ஆரியர் (இமய அரசன் மகள் பார்வதி மணத்திற் கூடியவர்கள்) கூட்டத்துள் ஒருவர் தென்னாடு நம் நாட்டினும் உயர்வுற்றது அதனை எப்படியேனும் கீழ்ப்படுத்துதல் வேண்டும். நம்மால் வென்று கீழ்ப்படுத்த இயலாது. சூழ்ச்சி கொண்டுதான் கீழ்ப்படுத்த முடியும். அங்ஙனம் கீழ்ப்படுத்த வல்லவர் தென்னாட்டானின் பெயர் பூண்டவராகிய இவ் வகஸ்தியரே செல்லத் தகுதியுடையார். ஆதலின் இவர் செல்லின் நன்று என்றனர். அனைவரும் ஆம்ஆம் என்றனர். அவர்கள் கருத்துப் படியே ஆரிய அகத்தியர்-1 தென்னாடுநோக்கிப் புறப்பட்டார். இதுவே ஆரிய அகத்தியர்-1 தென்னாடு வரக்காரணம்”- என்று எழுதுகின்றார்.

அகத்தியர் பிறப்பு பற்றிய கதைகளைப் பற்றிக் கூறும்போது, “ஒரு பெண்ணுடன் கலவாமல் ஆடவனின் விந்திலிருந்தே ஒரு பிறவி யுண்டாகும் என்றால் எவ்வளவு தூரம் பொய்யென்பதைக் கூறவேண்டுவ தில்லை. இத்தகைய பொய்க்கதைகள் புனைவதற்கென்றே தேவர்கள் நினைத்த அமயத்தில் நினைத்தவற்றைச் செய்துமுடிக்கும் ஆற்றலின ரென்றும், மாயமாய் மறைதல், வானத்திற் பறத்தல் போன்ற இயலாத செயல்களையும் செய்வர் என்றும் அறிவுக்குப் பொருத்தமில்லாதன வற்றைப் புளுகிக்கொண்டார்கள் என்பதில் என்ன வியப்பு?” - என்கிறார்.

ஆ.சிவலிங்கனார், முடிப்புரையில், அகத்தியர் ஒருவர் அல்லர் பலர் என்பதும், அவருள்ளும் தமிழகத்தியர்கள் இருவர் இரண்டு சங்கங்களில் திகழ்ந்தனர் என்பதும் ஆரிய அகத்தியர்களும் இருவர் என்பதும், முததூர் அகத்தியன் என்பவரும் ஒருவர்

இருந்தனர் என்பதும், பிற அகத்தியர்களும் இருந்திருக்கின்றனர் என்பதும் அவர்தம் வரலாறுகளும், ஆரிய அகத்தியர்களைப் பற்றிய கட்டுக்கதைகளும் ஒருவாறு உணரலாம். என்று கூறுகின்றார்.

இனி, முனைவர் தங்கராசு, துடிசைகிழார் அ.சிதம்பரனார் ஆகிய இருவரின் நூல்கள் அகத்தியர் பற்றிக் கூறுவனவற்றையும், பிற அறிஞர் கட்டுரைகளில் அவரைப் பற்றிக் கூறுவனவற்றையும் சுருக்கமாகப் பார்ப்போம்..

(அடுத்த இதழில் முடியும்)

## விழுப்புரம் ‘புத்தகக் காட்சி’ அரங்கில் 5-3-2025இல் தமிழநம்பி ஆற்றிய உரை:

மேடையிலும் எதிரிலும் அமர்ந்திருக்கும் மதிப்பிற்குரிய அன்பார்ந்த அவையோரே! நேர நெருக்கடி கருதி சுருக்கமாக அனைவர்க்கும் வணக்கம். மூன்றாம் ஆண்டாக விழுப்புரத்தில் புத்தகக் காட்சி நடந்துகொண்டு இருக்கின்றது! ஏற்பாடு செய்த தமிழ்நாட்டரசுக்கும் மாவட்ட ஆட்சியாளர்க்கும் மாவட்ட நூலகத்துறை அதிகாரிகள் பிற பணியாளர்க்கும் நன்றியைக் கூறுவோம்.

பத்தகங்களை, நூல்களைப் படிக்கவேண்டியதின் தேவையையும் படிப்பதால் பெறும் நன்மைகளையும் கடந்த மூன்று நாள்களில் உள்ளூர் எழுத்தாளர்கள் முநல் வெளியூரிலிருந்து வந்த பெரும்பெரிய எழுத்தாளர்கள் பேச்சாளர்கள் வரைப் பலரும் கூறியதைக் கேட்டோம். ஆம். ஒவ்வொருவரும் நூல்களைப் படிக்க வேண்டும். இன்றியமையாத் தேவைதான். உண்மைதான்!

சரி, எந்த நூல்களைப் படிக்க வேண்டும்! ‘கண்டதைப் படிப்பவன் பண்டிதனாவான்’ என்பார்களே, அது உண்மையா? இல்லை. உண்மை இல்லை. ‘தென்மொழி’ ஆசிரியர் பாவலரேறு பொருஞ்சித்திரனார் பாடுவார்:

எவர் பேச்சைக் கேட்பது எவர் நூலைப் படிப்பது?
எச்சரிக்கை யாயிரு தம்பி! – குட்டிச்
சுவராக உனையாக்கும் நூலுண்டு; பேச்சுண்டு;
தெளிய வேண்டும் நீ கண்டு!
கைக்குக் கிடைப்பன எலாம் படிக்காதே! காலத்தை வீண்டிக் காதே! - தம்பி
பொய்க்கும் புரட்டுக்கும் பளபளப்புண்டு; நீ புரியவேண்டும் அதைக்கண்டு! – என்பார்.

திருவள்ளுவப் பேராசான், ‘எனைத்தானும் நல்லவை கேட்க’ என்றும், ‘நல்லவை நாடி இனிய சொலின்’ என்றும் கூறுவார். சொல்லுவதிலும் கேட்பதிலும் நல்லவற்றை நாட வேண்டுமென்கிறார். இதே அளவுகோல்தான் படிப்பதற்கும்! நல்ல நூல்களைப் படிக்க வேண்டும். நல்ல நூல்கள் என்று தனியே உண்டா? தீய நூல்களும் இருக்கின்றனவா? ஆம் இருக்கின்றன.

ஒரு நல்ல புத்தகம் நூறு நண்பர்களுக்குச் சமமென்று சொல்வார்கள். சரி, நல்ல நூல்கள் யாவை? நல்ல புத்தகங்களின் கூறுகள், பண்புகள் என்னென்ன? பலவண்ணத்தில் பள்பளப்பாக உயர்ந்த தாளில் கவர்ச்சியாக அச்சிட்டவை எல்லாம் நல்ல நூல்களா? இல்லை!

நல்ல நூல்கள் அறிவை வளர்க்கும், அறிவை விரிவுபடுத்தும், மன அழுத்தத்தைக் குறைக்கும், சீராக்கும். மொழித்திறனை வளர்க்க உதவும். புதிய செய்திகளைத் தரும். தன்னம்பிக்கை ஊட்டும். அறிவியல் பார்வை தரும். நன்கு சிந்திக்க வைத்து, நல்ல உணர்வுகளைத் தூண்டும். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று வலியுறுத்தும், ஊக்கப்படுத்தும். நம்மை நல்ல நோக்கிற்கு மாற்றும், நல்ல ஒழுக்கத்தைக் கற்பிக்கும், ஆசானாக இருந்து நல்ல வாழ்க்கைக்கு வழிகாட்டும், வாழ்க்கையை மேம்படுத்தும்.

இனி, நல்லவையல்லாத நூல்கள், தீய நூல்கள் யாவை? அவற்றின் கூறுகள், பண்புகள் என்னென்ன? மங்கலான தாள்களில் கரட்டு அட்டைகளில் பலவண்ணப் பளபளப்பின்றி காணப்படுபவையா? இல்லை!

தீய நூல்கள் உண்மையில்லாத செய்திகளைத் தருகின்றவை, தவறான செய்திகளைத் தருகின்றவை, வெறுப்பை உண்டாக்கும் தன்மை கொண்டவை. தவறான நடத்தையையும் தவறான ஒழுக்கத்தையும் தூண்டுபவை. தவறான செயல்களுக்கு ஊக்குவிப்பவை, மன அழுத்தத்தை உண்டாக்குகின்றவை.

மூடநம்பிக்கையை வளர்ப்பவை. அறிவுக்கு ஒவ்வாத செய்திகளைத் தருபவை. அறிவியல் நோக்கற்றவை. குமுகத்தில், மக்களிடையே நல்லிணக்கத்தைக் குலைத்துத் தீங்குநேர வழிசெய்பவை. பிறப்பில் உயர்வுதாழ்வு கூறுபவை இன்னும் பல்வேறு தீமைகளுக்கு அடித்தளமாக இருப்பவை தீய நூல்களே!

ஓர் எடுத்துக்காட்டை மட்டும் பார்ப்போம். அண்மைக் காலமாக வரும் அகத்தியர் பற்றிய செய்தி! அகத்தியர் பற்றிச் செய்தித்தாள்கள் நடுப்பக்கக் கட்டுரைகளும் சிறப்புச் செய்திகளும் வெளியிடுகின்றன. நூல்களும் கூட வந்திருக்கின்றன. அகத்தியருடைய பிறப்பு பற்றிக் கூறப்படும் கதை அருவருப்பானது. அத்துடன், இரிக்கு வேத காலத்திலிருந்து கம்பஇராமாயண காலம்வரை பல்லாண்டுக் காலம் ஒருவர் வாழ்ந்திருக்க முடியுமா?

அகத்தியர் தொல்காப்பியருக்கும் ஆசிரியர் என்பதற்கும் அவர் தொல்காப்பியருக்கும் முன்னர்த் தமிழிலக்கணம் எழுதினார் என்று கூறுவதற்கும் தமிழ் இலக்கியம் படைத்தார் என்பதற்கும் எந்த அடிப்படைச் சான்றும் இல்லை. கற்பனையாகக் கூறப்படும் பழங்கதைகளைச் சான்றுகளாகக் கொள்ள முடியுமா? இன்னும் சொன்னால் இக்கதைகள் மூட நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவை. இச் செய்திகளால் எல்லாம் மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை. அத்துடன், அவை அறிவை மழுங்கடிப்பவை. முன்னேற்றத்திற்கு எதிரானவை.

சரி, போகட்டும்! இனி, நல்ல நூல்ளைக் கண்டுபிடிப்பது எப்படி? உலகம் முழுவதும் புத்தகங்கள் குவிந்து கிடக்கின்றன. இங்கு இந்தப் புத்தகக் காட்சியில் பல்லாயிரக் கணக்கான நூல்கள் உள்ளன. நூல்ளைத் தேர்வு செய்வது எப்படி? நல்ல நூல்களைக் கண்டுபிடிப்பது எப்படி?

முதலில், உங்களுக்கு பிடித்தமான துறை சார்ந்த நூல்கள் அல்லது நீங்கள் எதைப்பற்றி அறிந்துகொள்ள விரும்புகின்றீர்களோ அதை நோக்கிச் செல்லலாம். கழக(சங்க) இலக்கியம், சிறுகதை,

பாடல், புதினம், பல்வகை அறிவியல், மொழியியல், தன்முன்னேற்றம் முதலியவற்றில் உங்களுக்குப் பிடித்த துறையைத் தேர்வது முதன்மையாகும்.

நம்பகமான புகழ்பெற்ற நூலாசிரியர்களை அடிப்படையாகக் கொண்டு புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கலாம். புத்தகங்களை உண்மையாகப் படித்து மதிப்புரை எழுதியவர்களின் மதிப்பீட்டைப் படித்தும் தேர்ந்தெடுக்கலாம். புத்தகங்களைப் பற்றிய உண்மைத் திறனாய்வு வந்திருந்தால் அவற்றைக் கொண்டும் நல்ல நூல்களைக் கண்டுபிடிக்கலாம். அறிவார்ந்த நண்பர்கள் அன்பார்ந்த குடும்பத்தார் பரிந்துரைகளும் நல்ல நூல்களை அறிய உதவி செய்யக்கூடும். நூலகங்களிலும் கடைகளிலும் நூல்களைப் புரட்டிப் பார்த்து உள்ளடக்கம், எழுத்துநடை முதலியவற்றை நோட்டமிட்டும் நல்ல நூல்களைத் தேர்ந்திடலாம்.

எனவே, அன்பார்ந்த அவையோரே, நல்லவற்றை நாடுவோம். நல்ல புத்தகங்களைத் தேர்ந்தெடுத்துப் படிப்போம்! முன்னேறுவோம்! முன்னேற்றுவோம்! வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கின்றேன் நன்றி!